1989 பிப்ரவரி 21] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகைகளுக்கு சொல்லி யிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அந்தப் பயிர்கள் காப்பாற்றப்படவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அரசால் அங்கத்தின ருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

(ஓ) உசிலம்பட்டி, திருமங்கலம் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து நிவாரணம் வழங்குதல்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டித் தொகுதியில் வாழ்கிற விவசாயி களைப் பற்றிய அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச் சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

உசிலம்பட்டித் தொகுதியில் கடந்த 2 போகங்களாக நெல் அறுவடை செய்யப்படாமல் பயிர்களெல்லாம் காய்ந்துவிட்ட காரணத்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள் அந்தத் தொகுதியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். பருத்தி சாகுபடியும் சென்ற ஆண்டு முழுமையாகப் பாதிக்கப் பட்டு விட்டது. திருமங்கலம் பகுதியில் பத்தாயிரக் கணக்கான ஏக்கர் நெல் விளைச்சலும் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. அதன் காரணமாகவே தொகுதியிலுள்ள ஏழை எளிய விவசாய மக்கள் தஞ்சை மாவட்டத்தையும் மற்ற பகுதிகளையும் நோக்கி மூட்டை முடிச்சுகளோடு நாள்தோறும் நூற்றுக்கணக்கில் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து, நிவாரணப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நானும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஓ) தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்கு நான் இப்போது கொண்டு வருகிறேன்.